யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | வணிகக்கல்வி - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

சுட்டெண் :……………………………

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

01) பின்வருவன மனித தேவை, விருப்பங்கள் தொடர்பில் ஐந்து மாணவர்களினால் குறிப்பிடப்பட்ட கூற்றுக்கள் ஆகும்.

A - தேவைகளுக்கு மாற்று வழிகள் உண்டு, விருப்பங்களுக்கு மாற்று வழிகள் இல்லை.

B - தேவைகளை தோற்றுவிக்க முடியாது, விருப்பங்களைத் தோற்றுவிக்க முடியாது.

C - மனித தேவைகள் கட்டாயமானது, விருப்பங்கள் கட்டாயமன்று.

D - தேவைகள் அடிப்படையானது, விருப்பங்கள் அடிப்படையானது.

E - தேவைகள் பல்வகைப்பட்டது, விருப்பங்கள் பல்வகைப்பட்டதன்று.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்றுக்களினை கூறிய மாணவன் அல்லது மாணவர் யார்?

(1) A யும் C யும் (2) B யும் D யும் (3) C மட்டும்
(4) B யும் E யும் (5) E மட்டும் (.......)

02) கீழே தரப்பட்டுள்ள பகுதி 'அ' விற்கு மிகவும் பொருத்தப்பாடான விடயத்தினை பகுதி 'ஆ' விலிருந்து இணைக்கும் சரியான தொகுதி எது?

| பகுதி 'அ' | பகுதி 'ஆ' |
|---|---|
| A - வசதிப் பண்டம் | 1. பற்பசை |
| B - கடைப் பண்டம் | 2. தங்க ஆபரணம் |
| C - தனிச்சிறப்புப் பண்டம் | 3. வைத்திசாலைக்கான மருந்துகள் |
| D - நாடப்பெறாப் பண்டம் | 4. பாதணிகள் |
| E - கைத்தொழில் பண்டம் | 5. புதிய சஞ்சிகை |

(1) A - 1, B - 2, C - 3, D - 4, E - 5
(2) A - 2, B - 4, C - 5, D - 3, E - 1
(3) A - 3, B - 2, C - 4, D - 1, E - 5
(4) A - 4, B - 3, C - 2, D - 1, E - 5
(5) A - 1, B - 4, C - 2, D - 5, E - 3 (.......)

03) கீழ்வருவனவற்றுள் பாடசாலையொன்றின் அண்மிய சூழல் காரணியாக எதனைக் கருத முடியும்?
(1) மாணவர்கள்
(2) அதிபர்
(3) பாடசாலை முகப்பில் உள்ள மைதானம்
(4) அலுவலக ஊழியர்
(5) பாடசாலை விளையாட்டு உபகரணங்கள்

04) சில வணிகங்களின் ஒழுக்க விழுமிய மீறல்கள் கீழே தரப்படுகின்றன.
(1) வணிக உற்பத்தியினால் சுற்றுச்சூழல் மாசுபடல்
(2) பால்வேறுபாட்டுடனான வேதனக் கணிப்பு
(3) போலி விளம்பரங்கள் மூலம் நுகர்வோரை கவருதல்
(4) தரக்குறிகளை தவறாக பயன்படுத்தல்
(5) முதலீட்டாளருக்கு திரும்பல்களை வழங்காமை
மேற்தரப்பட்டவற்றுள் வணிக ஆளணி தொடர்பான ஒழுக்க விழுமிய மீறலாக கருதக்கூடியது (.......)

05) பின்வருவனவற்றுள் நுகர்வோர் பாதுகாப்பு விவகாரத்தில் சம்பந்தப்படாத நிறுவகத்தைத் தெரிவு செய்க.
(1) நுகர்வோர் விவகார அதிகாரசபை
(2) அளவீட்டு அலகுகள., நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்
(3) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
(4) உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
(5) இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகம் (.......)

06) பின்வரும் அட்டவணையில் $X$ நிரலில் வணிகம் மற்றும் அரசுடன் தொடர்புடைய சில செயற்பாடுகளும் $Y$ நிரலில் இச் செயற்பாடுகளின் விளைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| $X$ | $Y$ |
|---|---|
| A - அரசு வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்துவது | 1. பொருளாதாரத்தின் பண வழங்கலில் ஆகும். |
| B - அரசின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வணிகங்கள் உதவுவது | 2. ஒரு போட்டியாளர் ஆவதன் மூலம் ஆகும். |
| C - அரசின் இறைக் கொள்கைகள் வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவது | 3. உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்துவதனால் ஆகும். |
| D - அரசின் பணக்கொள்கைகள் செல்வாக்குச் செலுத்துவது | 4. பொருட்களின் விற்பனை அதிகரிப்பதன் மூலம் இலாபம் அதிகரிப்பதனால் ஆகும். |
| E - வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர் பாதுகாப்பு முக்கியமாக அமைவது | 5. உற்பத்திகளின் மீது பல்வேறு வரிகளை விதிப்பதன் ஊடாக பொருட்களின் விலையை உயர்வடையச் செய்வதன் மூலம் ஆகும். |

$X, Y$ நிரல்களின் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.
(1) A - 5, B - 2, C - 1, D - 4, E - 3
(2) A - 5, B - 3, C - 2, D - 1, E - 4
(3) A - 2, B - 3, C - 5, D - 4, E - 1
(4) A - 2, B - 3, C - 5, D - 1, E - 4
(5) A - 3, B - 2, C - 5, D - 4, E - 1 (.......)

07) பங்குடமையுடன் தொடர்புடைய வகையில் $X,Y$ ஆகிய நிரல்கள் தரப்பட்டுள்ளன. இவை இரண்டினையும் சரியாகத் தொடர்புபடுத்தும் தொகுதி எது?

| $X$ | $Y$ |
|---|---|
| A - பங்காளர் உறவு | 1. நோக்கம் நிறைவேறுதல் |
| B - பங்குடமை ஒப்பந்தம் | 2. கம்பனிச் சட்டம் |
| C - பங்குடமை கலைப்பு | 3. பரஸ்பர முகவராண்மை |
| D - உறுப்பினர் தொகை | 4. மோசடிகள் தவிர்ப்புச் சட்டம் |

$X,Y$ நிரல்களின் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A - 1, B - 2, C - 3, D - 4
(2) A - 2, B - 3, C - 4, D - 1
(3) A - 3, B - 4, C - 1, D - 2
(4) A - 4, B - 3, C - 2, D - 1
(5) A - 3, B - 1, C - 2, D - 4 (.......)

08) நட்டப் பொறுப்பு வரையறுக்கப்பட்டதும், பங்குபரிமாற்றகத்தில் பதிவு செய்யப்பட்டதுமான நிறுவன வகையாக கருதப்படக் கூடியது

(1) வரையறுத்த சொந்தக் கம்பனி
(2) வரையறுத்த பங்குடமை
(3) பங்கு வழங்காது உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி
(4) வரையறுத்த பொதுக்கம்பனி
(5) வரையறுத்த பொதுக்கம்பனி ($PLC$) (.......)

09) பின்வருவன முயற்சியாண்மையுடன் தொடர்புடைய சில காரணிகள் ஆகும்.

A - ஆர்வம்
B - மனோநிலை
C - கற்பனையுடைய சிந்தனை
D - முன்மாதிரி
E - அனுபவம்

மேலே காட்டப்பட்டவற்றுள் முயற்சியாண்மை அபிவிருத்திக்குத் தடையாக உள்ள காரணி எது? அல்லது எவை?

(1) A யும் C யும் (2) E மட்டும் (3) C யும் D யும் E யும்
(4) A யும் B யும் (5) B மட்டும் (.......)

10) முயற்சியாண்மையை உலகத்திற்கு அறிமுகப்படுத்திய நாட்டினையும், அதிகமாக அவ்வெண்ணக் கருவைப் பயன்படுத்தும் நாடுகளையும் முறையாக உள்ளடக்கிய விடையத் தெரிவு செய்யவும்.

(1) இந்தியாவும் அபிவிருத்தியடைந்த நாடுகளும்
(2) ஐக்கிய இராச்சியமும் அபிவிருத்தி அடைந்த நாடுகளும்
(3) பிரான்சும், அபிவிருத்தி அடைந்த நாடுகளும்
(4) பிரான்சும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும்
(5) பிலிப்பைன்சும், அபிவிருத்தியடைந்த நாடுகளும் (.......)

11) "அரச ஊழியர்களுக்கு அரசு 03 மில்லியன் வரை கடன் வழங்க முன்வந்துள்ளது" இக்கூற்றில் பணம் ஆற்றிய பணி

(1) பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனம்
(2) அரசவளப் பகிர்வு சாதனம்
(3) பெறுமதி அளவுகோல்
(4) பெறுமானத் திரட்டு
(5) பரிமாற்றூடகம் (.......)

12) மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) அனைத்துக் காசோலைகளுக்கும் செல்லுபடியாகும் காலம் ஆறு மாதங்கள் ஆகும்.

(2) நடைமுறைக் கணக்கொன்றில் மட்டுமே காசோலை வைப்பிலிட முடியும்.

(3) எல்லாக் காசோலைகளினதும் குறுக்கோட்டினை கட்டளை இடுபவருக்க மட்டுமே நீக்கச் செய்ய முடியும்

(4) வங்கி மேலதிக பற்றுக்குக் கட்டாயமாகப் பிணை தேவைப்படுகின்றது.

(5) நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்குக் கட்டாயமாக முகாமையாளரின் அனுமதி தேவைப்படும். (.......)

13) பின்வரும் அட்டவணையில் காப்புறுதித் தத்துவங்களும், அவற்றின் பண்புகளும் தரப்பட்டுள்ளன.

| $X$ | $Y$ |
|---|---|
| A - உச்ச நம்பிக்கை | 1. சொத்தொன்றிருப்பது அனுகூலமாகவும், அச்சொத்து அற்றிருப்பது பிரதிகூலமாகவும் இருக்கும். |
| B - காப்புறுதி செய்யும் உரிமை | 2. காப்புறுத்துவோனும், காப்புறுதியைச் செய்வோனும் அனைத்துத் தகவல்களையும் ஒழிவுமறைவின்றி வெளிப்படுத்தல். |
| C - இழப்பீட்டுத் தத்துவம் | 3. காப்புறுதியானது சூதாட்டத்தினின்றும் வேறுபட்டது. |
| D - அண்மிய காரணம் | 4. காப்பீட்டுக்குட்படுத்தாத இடர்களுக்கு இழப்பீடு கிடைக்காது. |

$X, Y$ என்பவற்றை இணைக்கும் போது சரியான விடையாக இருப்பது

(1) A - 1, B - 2, C - 3, D - 4

(2) A - 2, B - 1, C - 3, D - 4

(3) A - 2, B - 3, C - 1, D - 4

(4) A - 3, B - 2, C - 4, D - 1

(5) A - 4, B - 3, C - 2, D - 1 (.......)

14) இலங்கையில் அதிவேக நெடுஞ்சாலை வீதிகள் பரவலாக்கப்படும் போக்கைக் காணக்கூடியதாக உள்ளது.

A - தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதி

B - கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை வீதி

C - கொட்டாவ - கடுவலை வட்டப்பாதை அதிவேக வீதி

இவ்வீதிகளை அறிமுகப்படுத்தக்கூடிய குறியீட்டு எழுத்துக்களையும் அதன் இலக்கங்களையும் முறையாக காட்டும் தொகுதியாக இருப்பது

(1) A - (E - 01), B - (E - 02), C - (E - 03)

(2) A - (E - 01), B - (E - 03), C - (E - 02)

(3) A - (E - 02), B - (E - 01), C - (E - 03)

(4) A - (E - 02), B - (E - 03), C - (E - 01)

(5) A - (E - 03), B - (E - 01), C - (E - 02) (.......)

15)

| ஆவணங்கள் | வழங்கும் நிறுவனங்கள் |
|---|---|
| A - வாகனத் தகுதிச் சான்றிதழ் | 1. பிரதேச செயலாளர் காரியாலயம் |
| B - வருமானவரி அனுமதிப் பத்திரம் | 2. மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் |
| C - சாரதி அனுமதிப் பத்திரம் | 3. அரச அங்கீகாரமளிக்கப்பட்ட வேலைத்தளம் |
| D - வீசா அனுமதிப் பத்திரம் | 4. தூதுவர் காரியாலயம் |
| E - வார்நாமம் | 5. கப்பல் கம்பனி |

ஆவணங்கள், வழங்கும் நிறுவனங்களை சரியாக இணைக்கும் விடைத்தொகுதி பின்வருவனவற்றுள் எது?

(1) A - 1, B - 4, C - 3, D - 2, E - 3
(2) A - 2, B - 1, C - 3, D - 5, E - 2
(3) A - 3, B - 1, C - 2, D - 4, E - 5
(4) A - 4, B - 2, C - 1, D - 3, E - 5
(5) A - 5, B - 3, C - 4, D - 2, E - 1 (.......)

16) பின்வரும் காரணிகளுள் ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான வியாபாரத் தடைகளுள் இயற்கைக் காரணி எதுவாகும்?
(1) ஏற்றுமதி, இறக்குமதி வரையறைகள்
(2) உயர்ந்த இறுப்புக்கள்
(3) கலாச்சார வேறுபாடுகள்
(4) இறுக்கமான நாணயமாற்றுக் கொள்கைகள்
(5) வியாபார உடன்படிக்கைகள் (.......)

17) உலக சனத்தொகையின் அடிப்படையில் மிக்பெரிய வர்த்தக கூட்டாக கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எது?
(1) தெற்காசிய வலய வர்த்தக ஒப்பந்தம் (SAARC)
(2) ஐரோப்பிய சங்கம் (Eu)
(3) தென்கிழக்காசிய நாடுகளுக்கான சங்கம் (ASEAN)
(4) வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (NAFTA)
(5) மத்திய ஐரோப்பிய சுதந்திர வியாபார உடன்படிக்கை (CEFTA) (.......)

18) நிறுவனமொன்றின் முகாமைசார் மட்டம் சார்ந்த பதவிநிலைகள் கீழே தரப்படுகின்றன.
A - மேற்பார்வையாளர்
B - சந்தைப்படுத்தல் முகாமையாளர்
C - நிதி முகாமையாளர்
D - பிரதம நிறைவேற்று அதிகாரி
E - ஆய்வு அபிவிருத்தி முகாமையாளர்
F - நலன்புரி அலுவலர்
G - மனிதவள முகாமையாளர்
H - வேலைப் பணியாளர்
I - உற்பத்தி முகாமையாளர்
J - முகாரி

மேலே தரப்பட்டவற்றுள் நடுத்தர முகாமைத்துவமட்ட பதவி நிலைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி எது?
(1) A, B, C, F, G (2) A, D, F, H ,J (3) B, C, D, E, G
(4) B, C, E, F, H (5) B, C, E, G, I (.......)

19) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விடயமும் ஒன்றுடனொன்று ஏதோ ஒரு அடிப்படையில் தொடர்புடையனவாகும். எனினும் இதில் தொடர்பற்ற தொகுதியாக இருப்பது எது?
(1) தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல், தொடர்பாடல்
(2) தூரநோக்கு, இலட்சியநோக்கு, இலக்கு, குறிக்கோள்
(3) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல்
(4) அதிகார பகிர்வு, வளப்பங்கீடு, புத்தாக்கம், நியமங்களை உருவாக்கல்
(5) தொழில் உருவாக்கம், வேலைப்பகிர்வு, திணைக்களப்படுத்தல், தொடர்புபடுத்தல் (.......)

20) முகாமையாளர் ஏற்கனவேயுள்ள விதிகள், கொள்கைகளுக்கு அமைய பிரச்சினைகளுக்கு தீர்மானம் எடுக்கும் முறைமை எது?
(1) தனித் தீர்மானம்
(2) தொகுதித் தீர்மானம்
(3) நிகழ்ச்சித் தீர்மானம்
(4) நிகழ்ச்சியற்ற தீர்மானம்
(5) விஷேட தீர்மானம் (.......)

21) ஹென்றி மின்ற்ஸ்பேர்க் என்பவர் முகாமையாளர் தீர்மானம் எடுக்கும் வகிபாகம் உடையவராக செயற்படுகின்றார் என்பதன் கீழ் அவரது வகிபாகமாக கருதப்பட முடியாதது
(1) முயற்சியாளர்
(2) பிரச்சினைகளை கையாளுபவர்
(3) வளங்களை ஒதுக்கீடு செய்பவர்
(4) தொடர்புகளைப் பேணுபவர்
(5) நடுநிலையாளர் (.......)

22) அமைப்பின் இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தனிநபர்களின் அல்லது குழுவொன்றின் நடத்தையின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் இயலுமை எத்தகைய முகாமைத்துவத் தொழிற்பாட்டின் கீழ் கருதப்படும் ஒன்றாகும்.
(1) திட்டமிடல்
(2) ஒழுங்கமைத்தல்
(3) நெறிப்படுத்தல்
(3) கட்டுப்படுத்தல்
(5) அதிகார கையளிப்பு (.......)

23) $X$ அச்சில் குறிப்பிடப்பட்ட பதங்களினை மிகச் சரியாக விளக்கும் $Y$ அச்சில் உடைய விளங்கங்களினை சரியாக இணைக்கும் தொகுதி

| $X$ | $Y$ |
|---|---|
| A - அதிகாரம் | 1. ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாளருக்கு மட்டும் பொறுப்புக் கூறுதல் |
| B - கட்டுப்பாட்டுத்துணை | 2. அதிகாரம் தொடர்ச்சியாக பாய்ந்து செல்லல் |
| C - கட்டளையில் ஓரினத் தன்மை | 3. முகாமையாளருக்கு அறிக்கையிடும் ஊழியர் எண்ணிக்கை |
| D - கட்டளைச் சங்கிலி | 4. முகாமையாளருக்கு கிடைக்கும் சட்டரீதியான பலம் |
| E - அமைப்புமுறை | 5. அதிகாரம், பொறுப்பு, வகைகூறல் போன்றவை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள முறை |

$X, Y$ நிரல்களின் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.
(6) A - 4, B - 3, C - 1, D - 2, E - 5
(7) A - 4, B - 3, C - 2, D - 1, E - 5
(8) A - 3, B - 2, C - 1, D - 5, E - 4
(9) A - 1, B - 2, C - 3, D - 4, E - 5
(10) A - 5, B - 4, C - 3, D - 2, E - 1 (.......)

24) ஏனையோரை விளங்கிக் கொள்ளும் ஆற்றலை முகாமையாளர் ஒருவர் கொண்டிருப்பின், அத்திறன் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

(1) எண்ணக்கருத்திறன்

(2) மானிடத்திறன்

(3) தொழில்நுட்பத்திறன்

(4) பூகோள முகாமைத்துவத்திறன்

(5) தகவல் தொடர்பாடல் திறன் (.......)

25) பின்வருவனவற்றுள் வேலை உற்பத்தியுடன் தொடர்புபடாத பண்பு எனக் கருதக்கூடியது

(1) கட்டளைக்கு ஏற்ப உற்பத்தி நடைபெறல்

(2) கிரயங்கள் குறைவடைந்து அலகு விலை குறைவடைதல்

(3) கூடுதலாக உழைப்புச் செறிவு முறை பயன்படுத்தப்படும்

(4) உற்பத்தி திட்டமிடலும், கட்டுப்படுத்தலும் பொருளுக்கு பொருள் மாறுபடல்

(5) சந்தை நட்ட அச்சம் குறைவாக அல்லது இல்லாது இருத்தல் (.......)

26) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு உற்பத்திகளினை தொடர்ச்சியாக பரிசோதனை செய்தல் தரக்கட்டுப்பாடாகும். பின்வருவனவற்றுள் தரக்கட்டுப்பாட்டு நுட்ப முறைகளினை கொண்ட தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) தரவட்டம், தர உறுதி, தர நியமம், சரக்குமட்ட முறை

(2) தொக்கட்டை முறை, சரக்குமட்ட முறை, சரக்கு பேரேட்டு முறை, மொத்தத்தர முகாமை

(3) தர உறுதி, கணனி செயற்திட்டமுறை, சரக்கு பேரேட்டு முறை, மொத்தத்தர முகாமை

(4) பூச்சியவழு, புள்ளிவிபரக் கட்டுப்பாடு, தரவட்டம், மொத்தத்தர முகாமை

(5) இரட்டைப்பத்திர முறை, $ABC$ பகுப்பாய்வு, சரக்குமட்ட முறை, கணனி செயற்திட்டமுறை (.......)

27) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் செயற்பாட்டு முகாமைத்துவத்திற்குப் பொருத்தமற்ற தொழிற்பாட்டைத் தெரிவு செய்க.

(1) திரும்பி வரும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல்

(2) உற்பத்திப் பொருட்களை வடிவமைத்தல்

(3) மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல்

(4) தரக்கட்டுப்பாடு

(5) ஆய்வு மற்றும் அபிவிருத்தி (.......)

28) உற்பத்தி நிறுவனமொன்றின் சில செலவீனங்கள் கீழே தரப்படுகின்றன.

A - ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளங்கள்

B - தொழிற்சாலைக் காப்புறுதிக் கட்டணங்கள்

C - மூலப்பொருட்களின் கொள்வனவு

D - விற்பனைத் தரவுகள்

E - வெற்றுப் போத்தல்களைக் கொள்வனவு செய்தல்

F - வரிக்கட்டணங்கள்

G - துண்டு வீத அடிப்படையிலான ஊழியர் கூலிகள்

H - உற்பத்தி அலகுகள் மீதான தனியுரிமைக் கட்டணங்கள்

இவற்றுள் மாறும் செலவுகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) A, B, C, D, E (2) A, B, F, G, H (3) B, E, F, G, H

(4) C, D, E, F, G (5) C, D, E, G, H (.......)

29) உற்பத்தித் திறன் முக்கியமாக இருப்பதற்குரிய காரணம் அல்லாதது எது?

(1) வளங்களைப் பகிர்தல்

(2) நிலையான செலவினையும், பங்களிப்பையும் கட்டுப்படுத்தல்

(3) வணிகத்தினை விரிவாக்கம் செய்தல்

(4) ஒற்றுமைத் தன்மை நிறுவனத்துடன் வினைத்திறனை ஒப்பீடு செய்தல்

(5) வணிக நிறுவனத்தின் முன்னேற்றத்தினை மதிப்பிடல் (.......)

30) கணினி உதவியுடனான வடிவமைப்பினால் ($CAD$) ஏற்படும் ஒரு நன்மை அல்லாதது எது?
(1) வீண்விரயங்கள் குறைதல்
(2) பூச்சிய வழுவுடைய உற்பத்திப் பொருட்கள் உருவாக்கப்படல்
(3) உற்பத்தி விரைவுபடுத்தப்படல்
(4) தொழில் வழங்குனர், தொழிலாளர் தொடர்பு விருத்தியடைதல்
(5) விளைதிறன் அதிகரித்தல் (.......)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

31) அ) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கடற்தொழில் என்பன ................................................ பிரிவுகளாகக் கருதப்படும்.

ஆ) சுரங்கத் தொழில், தயாரிப்புத் தொழில், மின்வலு, கட்டிடவாக்கம் என்பன ................................................ பிரிவுகளாகக் கருதப்படும்.

32) அ) வணிகமொன்றின் புறச்சூழலுடன் இணைந்ததாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் தொகுதியொன்றாக ................................................ காணப்படுகின்றது.

ஆ) பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்பினருள், வணிகங்கள் தமது நிலைத்திருத்தலை உறுதிப்படுத்துவதற்காக ................................................ மீது அக்கறை செலுத்துகின்றன.

33) அ) நிதிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தை ................................................ எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

ஆ) வணிக வங்கிகளும், முதன்னிலை வணிகர்களும் அரச பிணைப்பத்திரங்களைப் பிணையாக வைத்து அவற்றுக்கு ஈடாக மத்திய வங்கியிடமிருந்து நிதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது அறவிடப்படும் வட்டி வீதமானது ................................................ என அழைக்கப்படும்.

34) அ) காப்புறுதியில் பணரீதியாக மதிப்பிடக்கூடிய இழப்பீடொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில் ................................................ எனும் பெயர்கொண்டு அழைக்கப்படும்.

ஆ) தனது வாடிக்கையாளரின் பெறுமதிமிக்க பொருட்களையும் ஆவணங்களையும் பாதுகாப்பதற்காக வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்படும் சேவை ................................................ எனப்படும்.

35) அ) ஊக்குவித்தலின் பிரதான சிறப்பம்சம் ஊழியர்களின் ........................................ பங்களிப்பாகும்.

ஆ) முறைசார்ந்த தொடர்பாடலினைப் போன்றே முறைசாராத தொடர்பாடலிலும் சில நன்மைகள் உண்டு. முறைசாராத் தொடர்பாடல்களாக ........................................ மும், ........................................ மும் குறிப்பிடுவர்.

36) அ) தலைவர் தொழிற்படும் முறைமைக்கேற்ப, தலைமைத்துவ பாங்கை ........................................, ........................................ என வகைப்படுத்துவர்.

ஆ) எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்குச் சாதனைகளை அடைந்துள்ளார்களா என எதிர்பார்க்கும் செய்முறை ........................................ ஆகும்.

37) அ) மறுகட்டளை மட்டம் = ........................................ × உச்சக் கட்டளைக் காலம்

ஆ) ........................................ = அலகு விற்பனை விலை − அலகுமாறும் செலவு

38) அ) நாளொன்றிற்கு, வாரமொன்றிற்கு, மாதமொன்றிற்கு எனும் வகையில் யாதேனும் குறிப்பிட்ட காலப்பகுதியொன்றுக்குரிய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான பொருட்களின் அளவுகள் அக்காலப் பகுதிக்குரிய ........................................................... என அழைக்கப்படும்.

ஆ) பொருள் கட்டளை இடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து களஞ்சியசாலைக்குப் பொருள் கிடைக்கும் வரையில் உள்ள காலம் ............................................................. எனப்படும்.

39) அ) "கேள்விக்கேற்பவே சந்தைக்கு வழங்கல்" என்பதுடன் தொடர்புடைய பூச்சிய களஞ்சியக் கிரயத்தினைக் காட்டும் நுட்பமுறை ........................................................................... என்பதாகும்.

ஆ) சமதன்மை கொண்ட பொருட் தொகுதியொன்றை ஒரு தடவை உற்பத்தி செய்ததன் பின்னர், மற்றோர் பொருட் தொகுதியொன்றை உற்பத்தி செய்தலை ........................................ உற்பத்தி என அழைப்பர்.

40) உற்பத்தி முறைகளின் வகைப்படுத்தலைக் கொண்டு பின்வரும் அட்டவணையினைப் பூர்த்தி செய்க.

| நியதி | வேலை உற்பத்தி | பாய்ச்சல் உற்பத்தி |
|---|---|---|
| 1. வெளியீட்டின் அளவு | .................................................. | .................................................. |
| 2. .............................................. | .................................................. | ஒரு தனி உற்பத்திப் பொருள் |

❖ **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) வணிகங்கள் தமது ஒழுக்கக் கோவைகளின் மூலம் பாதுகாக்க முற்படும் நான்கு பகுதியினர்

1. ..................................................................... 2. .....................................................................

3. ..................................................................... 4. .....................................................................

42) பொருளாதாரத்தில் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படும் நான்கு முறைகளினைக் குறிப்பிடுக.

1. .....................................................................
2. .....................................................................
3. .....................................................................
4. .....................................................................

43) அ) ஒரே வகையான வணிகத்தில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு அல்லது மேற்பட்ட வணிக நிறுவனங்கள் ஒன்றாக இணைவது எவ்வாறு அழைக்கப்படும்?

.....................................................................

ஆ) அங்கீகார வணிகங்களின் பிரதான மூன்று வகைகளும் எவை?

1. .....................................................................
2. .....................................................................
3. .....................................................................

44) அ) தனது தனிப்பட்ட சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், சட்டரீதியான தனிமனித அந்தஸ்தும் நீண்டகால நிலைப்புத் தன்மையும் கொண்ட ஒரு நபரினால் ஆரம்பிக்கக்கூடிய வணிக அமைப்பு வகை எது?

.....................................................................

ஆ) வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அமைப்பு அகவிதிப் பத்திரத்திற்கு ஒத்ததாக கூட்டுறவு சங்கமொன்றும் பதிவு செய்வதற்கு முன்வைக்கப்பட வேண்டிய ஆவணம் எது?

..........................................................................................

45) தீர்மானம் எடுத்தலின் தர்க்க ரீதியான செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................
5. ..........................................................................................

46) திணைக்களப்படுத்தலின் எவையேனும் நான்கு அடிப்படைகளைக் குறிப்பிடுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................

47) செயற்பாட்டு முகாமைக்குரிய பிரதான கருமங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................

The National e-learning Portal for The General Education

48) உற்பத்தியில் ஆய்வு அபிவிருத்திக் கருமங்களுக்குரிய முக்கியத்துவத்திற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................

49) நவீன கணனித் தொழில்நுட்ப வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ..........................................................................................
2. ..........................................................................................
3. ..........................................................................................
4. ..........................................................................................

50) பங்குடமை தொடர்பில் பின்வரும் கருமங்களுக்குரிய சட்டங்களை எதிரே எழுதிக் காட்டுக.

1. ரூபா 1000 இற்கு மேற்பட்ட மூலதனத்தினை ஈடுபடுத்தல் :-

..........................................................................................

2. இலாபநட்ட பகிர்வு :- ..........................................................................................

3. உச்சப் பங்காளர் எண்ணிக்கை :- ..........................................................................................

4. பொதுப் பெயரொன்றில் நடாத்திச் செல்லல் :-

..........................................................................................